# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணிப் பரீட்சை, ஆண்டு I – 2019

## உரோமானியச் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

**ஐந்து (05)** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

01. 'உரோமானியச் சட்ட வரலாற்றில் நியதிச் சட்டங்களானவை பொதுச் சட்டத்தினுடைய வளர்ச்சியில் மிகவும் சிறிய பங்களிப்பினையே வழங்கியுள்ளன.'

    மேற்போந்த கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

02. (அ) மற்றும் (ஆ) பகுதிகள் இரண்டிற்கும் விடையளிக்க

    (அ) 'உரோமன் தாதையதிகாரம் எனும் நிறுவகமானது தாதைக்கு அவருடைய சந்ததியினர் மீது அளவற்றதோர் அதிகாரத்தினை வழங்கியது. இருப்பினும், உரோமானியச் சட்டத்தின் வளர்ச்சியின் விளைவாக பிள்ளையினுடைய ஆள் சார்ந்த தாதையினுடைய அதிகாரங்கள் படிப்படியாக மாற்றமடைந்தன.'

    மேற்போந்த கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? எடுத்துக்காட்டுகள் மூலம் உமது விடையினை ஆதாரப்படுத்துக.

    (ஆ) ஆர்னுஸ் எனும் சுதந்திரமான உரோமானியப் பிரஜை ஒருவர், நெறிமுறையான பிள்ளைகளற்றிருந்தான். அவன் தனது நெருங்கிய நண்பனுடைய நெறிமுறையான மகனான ஸ்பார்டாகஸ் என்பவனை கவனித்து வந்ததுடன், அவன் மீது கட்டுப்பாட்டையும் கொண்டிருந்தான். பின்னர், காடுஸ் எனும் பெயருடைய நெறிமுறையற்ற மகன் ஒருவன் தனக்கு இருப்பதை அவன் கண்டறிந்தான். ஸ்பார்டாகஸ் மற்றும் காடுஸ் ஆகிய இருவர் மீதும் தாதை அதிகாரத்தினை ஸ்தாபிக்க ஆர்னுஸ் விரும்பினான்.

    காரணங்களைத் தந்து ஆர்னுஸ்க்கு ஆலோசனை வழங்குக.

03. அப்பியஸ் என்பவன் டைபர் நதியோரத்தில் காணியொன்றினை *mancipatio* ஊடாகப் பெற்றுக்கொண்டதுடன் அதில் வீடொன்று மற்றும் பெரிய களஞ்சியசாலையொன்றையும் கட்டினான். பின்னர் கயுஸ் என்பவனிடமிருந்து மூன்று கறுப்புக் குதிரைகளை *traditio* மூலமாகப் பெற்றுக்கொண்டதுடன், அருகாமையிலிருந்த காட்டிலிருந்து மேலும் மூன்று காட்டுக் குதிரைகளையும் கைப்பற்றினான். இருப்பினும், அப்பியஸினால் கொள்வனவு செய்யப்பட்ட கறுப்புக் குதிரைகளின் சட்டபூர்வ சொந்தக்காரன் கயுஸ் இல்லையென்பது வெளிப்படுத்தப்பட்டதுடன் பின்னர், குதிரைகளின் உண்மையான சொந்தக்காரனான காட்டோ என்பவன் தன்னுடைய குதிரைகளைத் திருப்பித் தருமாறும் கோரினான். அப்பியஸ் அவனுடைய குதிரைகளுக்காக தொழுவம் ஒன்றைக் கட்டுவதற்கு தீர்மானித்ததுடன், அவன் அந்தப் பணிக்காக மார்கஸ் என்பவனை அமர்த்தினான். கட்டுமானத்தின் போது அப்பியஸினுடைய காணியில் மார்கஸ் புதையலொன்றைக் கண்டுபிடித்தான். சில ஆண்டுகளுக்குப் பிறகு டைபர் நதியானது அதன் பழைய போக்கைக் கைவிட்டு மற்றொரு திசையில் பாய்ந்தமையால் நதியினுடைய பழைய படுக்கையிலிருந்து ஒரு பகுதி நிலத்தினை அப்பியஸ் பெற்றுக்கொள்ள முடிந்தது.

அப்பியஸினால் மேற்கொள்ளப்பட்ட மேற்போந்த கையகப்படுத்தல் முறைமைகளின் வலிதாந்தன்மை தொடர்பில் காரணங்களைத் தந்து ஆராய்க.

04. பின்வரும் சூழ்நிலைகளில் எழுகின்றதான சட்டப் பிணக்குகள் மற்றும் பொருத்தமான நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்க.

i) உரோமானிய வணிகரொருவனான ஜுலியஸ் என்பவன், தானிய வர்த்தகத்தில் கணிசமான லாபம் ஈட்டுபவனாவான். பானுஸ் என்பவன் 30 *modius* (எடைக்கான ஒரு உரோமன் அலகு) கோதுமையினை ஏழு நாட்களுக்குள் சம அளவில் திருப்பித்தருவதாக வாக்குறுதியளித்து ஜுலியஸிடமிருந்து இரவலாகப் பெற்றுக்கொண்டான். தானியத்தைக் கொண்டு செல்வதற்காக ஜுலியஸினுடைய குதிரை மூலம் செலுத்தப்படுவதான வண்டியையும் பானுஸ் கோரினான். ஜுலியஸ் அவனுடைய வண்டி மற்றும் இரண்டு குதிரைகளை இலவசமாக பானுஸுக்குக் கொடுத்ததுடன், தனக்கு விருப்பமான இரண்டு குதிரைகளையும் கவனித்துக்கொள்ளுமாறு அவனைக் கோரினான். பயணத்தின் போது, பானுஸ் சூறாவளியொன்றினால் செங்குத்தான மலைச் சாலையில் சிக்கியதுடன், குதிரைகளுடன் சேர்த்து வண்டியும் புயல் காற்றினால் குன்றுகளுக்கிடையில் வீசியெறியப்பட்டது. வண்டியிலிருந்து பாய்ந்ததன் மூலம் பானுஸ் உயிர் பிழைக்க முடிந்தது. ஏழு நாட்களின் பிறகு, கடனாகப் பெற்றுக் கொண்டதுக்கு இணையான அளவு பொருட்களைத் திருப்பித் தருமாறும், அத்துடன் குதிரைகள் மற்றும் வண்டிக்கான நட்டஈட்டுத் தொகையினையும் தருமாறும் ஜுலியஸ் கோரினான்.

ii) ஜுலியா என்பவள் கிரேக்க நாட்டுக்கான தன்னுடைய பயணத்துக்கு முன்னர் அவளுடைய பெறுமதிமிக்க முத்துக்களால் ஆன கழுத்துமாலையினை அவளுடைய நண்பியான சன்ஸா என்பவளின் பாதுகாப்பான காவலில் வைப்பிலிட்டாள். ஜுலியா உரோமுக்குத் திரும்பிய போது சன்ஸா அவளுடைய நண்பிக்குக் கழுத்து மாலையொன்றினை ஒப்படைத்தாள். பின்னர், அது செயற்கையான முத்துக்களைக் கொண்டு செய்யப்பட்ட போலியான கழுத்து மாலை என்பதை ஜுலியா கண்டறிந்தாள்.

05. பின்வரும் சூழ்நிலைகளில் திறத்தவர்களுடைய செயல்களுக்கான சட்டத் தாக்கங்கள் தொடர்பில் விளக்குக:

அ) புறுட்டஸ் மற்றும் மார்கஸ் ஆகியோர் காணிப் பிணக்கொன்றின் காரணமாக நல்லுறவில் காணப்படவில்லை. ஒரு நாள் மார்கஸ், தேவாலயம் ஒன்றுக்கு அருகில் காணப்பட்டதான மைதானம் ஒன்றில் பந்து விளையாடிக்கொண்டிருந்தபோது புறுட்டஸ் வேறு சிலருடன் மைதானத்தைக் கடந்து செல்வதைக் கண்டான். மார்கஸ் பந்தினை வேகமாக வீசி எறியவே அது புறுட்டஸினுடைய தலையில் அடித்ததுடன் புறுட்டஸ் அதனால் கீழே விழுந்தான். புறுட்டஸினுடைய நண்பர்கள் மற்றும் மார்கஸுக்கு இடையில் இதனால் கைகலப்பொன்று ஏற்பட்டது. கைகலப்பினை நிறுத்துவதற்கு தேவாலயத்தின் மதகுரு தலையீடுசெய்தாராயினும், மார்கஸ் மதகுருவின் முகத்தில் அறைந்தான்.

ஆ) லூயிஸ் என்பவனுடைய நகைக் கடையிலிருந்து ஒரு பெட்டி பெறுமதிவாய்ந்த ஆபரணங்கள் காணாமற் போயின. மூன்று நாட்களின் பின்னர் ஆபரணங்கள் கொண்ட அதே பெட்டி பிளேபியஸ் என்பவனுடைய இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. பெட்டியின் உள்ளடக்கங்கள் தொடர்பில் தான் அறிந்திருக்கவில்லை என பிளேபியஸ் கோரினான். இரண்டு நாட்களுக்கு முன்னர் தன்னுடைய நண்பனான ஒலுஸ் என்பவன், தன் வீட்டிற்கு பெட்டியைக் கொண்டுவந்து, கடுமையான மழை காரணமாக அவனுடைய இடத்தில் வெள்ளம் நிரம்பியதாகக் கூறி அப்பெட்டியைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்காகக் கொடுத்ததாகக் கூறினான்.

இ) பாபிரியா எனும் பத்து வயதுடைய மெலிந்த உடலமைப்புடைய அடிமைப் பெண் ஒருத்தி சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாள். கமிலியா எனும் செவிலியர் ஒருவர் பாபிரியாவைக் கவனித்துக்கொண்டதுடன் அவளுக்கு திரவ மருந்து ஒன்றினை அம் மருந்து உட்கொள்ளப்பட வேண்டிய அளவு தொடர்பில் அதற்குப் பொறுப்பான மருத்துவரிடம் முறையாகச் சரிபார்க்காமல் நாளொன்றுக்கு மூன்று வேளை உட்கொள்ளுமாறு வழங்கினாள். மருந்தின்

அளவானது நோயாளியினது நிறை மற்றும் வயதின் மீது கணிக்கப்பட வேண்டியிருந்தது. அதிக எடையுடைய வயது வந்த ஒருவருடைய அளவுக்கானதை கமிலியா பாபிரியாவுக்கு வழங்கினாள். பாபிரியா அந்த மருந்தினை உட்கொண்டமையால் அது உடனடியாக அவளில் அதிகப்படியான தூக்கக் கலக்கத்தை ஏற்படுத்தியது. அந்த மருந்தினை அருந்தியதன் பின்னர் பாபிரியா நடந்து சென்ற போது நிலத்தில் கிடந்த சில இரும்புக் கம்பிகள் மீது தடுக்கிவிழுந்து அவற்றில் ஒன்றின் மீது அவளுடைய தலை மிகவும் மோசமாக அடிபட்டதோடு கடுமையான தலைக் காயத்தின் காரணமாகச் சில நாட்களின் பின்னர் அவள் மரணமடைந்தாள்.

06. 'உரோமானிய இறுதி விருப்பாவணம் ஒன்றில் வாரிசுகளை நியமித்தல் தலையாய முக்கியத்துவமுடைய தேவைப்பாடு என்பதுடன் அவ்வாறு செய்யத் தவறுகின்றமை அவ் இறுதி விருப்பாவணத்தின் வலிதாந்தன்மையைச் சவாலுக்குட்படுத்துகிறது'

பொருத்தமான எடுத்துக்காட்டுக்களை வழங்குவதன் மூலம் வலிதான இறுதி விருப்பாவணம் ஒன்றுக்கான ஏனைய தேவைப்பாடுகளின் பிண்ணனியில் மேற்போந்த கூற்றினை ஆராய்க.

07. பின்வரும் சூழ்நிலைகளில் பயன்முறைக்கோள் *(usucapio)* பெறப்பட முடியுமா என்பதை கோட்பாடுகள் மற்றும் காரணங்களை முன்வைத்து X என்பவனுக்கு ஆலோசனை வழங்குக:

அ) A என்பவன் B என்பவனுக்குத் தங்கக் குவளை ஒன்றை இரவலாக வழங்கினான். B இறந்தபின் B இனுடைய வாரிசான C என்பவன் அக் குவளை B க்குச் சொந்தமானது என நம்பி அதனை X க்கு விற்றான்.

ஆ) A என்பவன் எருதுகளின் மந்தையொன்றின் மீது பயனல உரிமையைக் (usufruct) கொண்டிருந்தான். அவ் எருதுகளில் பலவற்றிற்குக் கன்றுக் குட்டிகள் இருந்தன. A அக் கன்றுக் குட்டிகளை X க்கு விற்றான்.

இ) A என்பவன் X என்பவனுக்கு மோதிரம் ஒன்றை விற்றான். அந்த மோதிரம் B என்பவனுக்குச் சொந்தமானது என A மற்றும் X அறிந்திருக்கவில்லை. X மோதிரத்தினுடைய உடைமையைப் பெற்றுக்கொண்ட உடனே அம் மோதிரம் B என்பவனுக்குச் சொந்தமானது என அவன் கண்டறிந்தான்.

ஈ) பலவந்தமாக எடுக்கப்பட்டதான ஒரு கழுத்து மாலை மற்றும் திருடப்பட்டதான ஒரு ரதம் என்பவற்றை X உடைமையில் கொண்டிருந்தான்.

உ) யாரும் குடியிருக்காததான காணியை A என்பவன் ஆக்கிரமிப்பு செய்தான். A பின்னர் அக் காணியை X க்கு விற்றான்.

*******